உ

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

சைவத்தின்மேற்சமயம்வேறிலையதிற்சார்சிவமாந் [ருள்வாய்
தெய்வத்தின்மேற்றெய்வ மில்லெனுநான்மறைச்செம்பொ
மைவைத்த சீர்த்திருத் தேவா ரமுந்திரு·வாசகமும் [யே·
உய்வைத் தாச்செய்த நால்வர்பொற் றளெம் முயிர்த்துணை

திருவண்ணாமலைப் பதிகம்.

திருவண்ணாமலை

தீபதரிசனச்

சரித்திரச் சுருக்கம்.

சேலம்.

ஸ்ரீ. திருவள்ளுவ நாயனர்

சங்கத்தின்·உபத்தலைவர்,

நே. மு. ஷ. ஷண்முகசுந்தர நாயனரால்

எழுதி

ஷை சங்கத்தாரால் விநியோகிக்கப் பட்டது.

நாயனர் அச்சுக்கூடம்.

பழைய வண்ணாரப்பேட்டை,

சென்னை.

5-12-1910.

OFFICE OF THE REGISTRAR OF ... 19 JAN 1911 MADRAS

R23:38.2113J
N10.
149607

சென்னை-600 006

உ

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR 18 JAN 1911 MADRAS

திருவண்ணாமலைப் பதிகம்.

வெண்பா - காப்பு.

மங்கலமா மண்ணா மலையீசன் மாணடியை
யங்கையினாற் றொட்டு அவனையாந்—திங்கமுந
நல்லா ருளத்தில் நடிக்கும் விநாயகனைப்
புல்லார் மனமே! புகழ்.

149607

உலகுயிர் பரமா யோங்கியு மோங்கா
வொருவனே! வொப்பிலா வுயர்வே!
பலநலப் பணையே! பரவுவார் பரமே!
பைங்கொடி படர்பசு பதியே!
அலையிலா வருணை யம்பதி யழகே!
ஆடியை நோக்கு மந்தகனாய்
செலவிலாச் செயலாற் றிகைத்திளைப் பேணை
சேர்த்தணைத் தாள்வதுன் செயலே.

செயலெலாஞ் சிதைத்த சித்தம தியங்குஞ்
செல்வமே! செழுமலைத் தேனே!
மயலெனும் பாவ வஞ்சமாம் வலியை
வாட்டிட வாய்த்தமா மருந்தே!

புவனிறை யருணைப் புத்தமு தே!புன்
பொய்யெலா மெய்யெனப் பொருந்தி
அயலைனா னென்னு மகந்தையி லழியா
வானந்த மடைந்திட வருளே.

அருளரு ளென்னு மருமறை யறியா
வாதிமத் யாந்தமற் றூழ்ந்து
வருமொரு முதலே! மாதவ ராடி
மகிழுமா றாழியே! மழுங்காப்
பெருமையே! யருணைப் பெரியனே! சிறியேன்
பேய்மனம் பிணிந்துற வாடு
மருளெலா மழிய வரமரு ளெந்தாய்
வாய்த்தநற் சுபதின மிதுவே.

இதுவது வென்னு மிடமிறந் தியங்கு
மெந்தையே! யெந்தயா பரனே!
புதுமணப் போதே! பொறிபுலன் புதைத்த
போதெழு புண்ணியப் பொருளே!
துதிபொதி யருணைத் தூயனே! துயர்சூழ்
தொல்லுல காதியா மூன்றின்
சதியினுற் சலனஞ் சார்ந்திடா தருளித்
தமியனை யாட்கொளுந் தருவே!.

திருவெனுந் தயையே! தனிப்புறத் தவத்தர்
தலைவனே! தாரக நாமப்
பெரியனே! பிள்ளை பித்தர்பே யான
பேரிடம் பிரிதலில் லானே!
அரியனே! யருணைத் தலத்தி னம்மானே!
யலைவறு வறிவினி லாழ
வருகவென் றருளென் வஞ்சனை வதைய
மாதவ ரோதுமா மலையே!.

மலைதலின் மனத்தின் மாசிலாமணியே!
மதிப்பவ மதிப்பெனும் வலிய
வலையினின் மாளும் வாடியே மருளும்
வஞ்சனேன் வாழ்வினுக் கிடமா
யிலகிய வருணை யிறைவ னெம்மானே!
யினித்தனி யாயெனை யிருத்தி
தொலையினிற் செல்லத் துணிவையே லெவர்பால்
சொல்வதென் றெண்மறைச் சுடரே!.

சுடரினிற் சுடரே! சுபாசுப மொன்றுச்
சுத்தரின் றுணைநலச் சுகமே!
இடையிடை யிடா மிருமன விடும்பை
யெனிவிறுத் தெனிலெனை பியக்காய்
அடிமுடி யரூப அருணையி னரசே!
ஆதுலத் தாழ யென்னுனை
விடுவைவ்ய லெனினிங் மேட்டிமை யென்னும்
மேதையர் மேவுமா விளக்கே!.

விளக்கு மெய்யடியர் மெய்யுணர் வே!யென்
வினையெலாம் விதிர்விதிர்த் தேங்க
துளக்கமாஞ் சோதி சூர்யனே! தூல
சூக்மனே! துரிசறுத் தாளா
யளத்தலில் லருணை யரியய னரனே!
அந்தகற் காட்படு மவல
வுளத்தினு லலையா துதவிடு முயிரே!
உனையலா லுய்வனோ வுரையே.

உரையினு ளுரையே! உலைவிலா வுயர்வே!
உலோசனத் துள்ளொளி வுவப்பே!
கரைகழல் கடலே! கருவியுங் கரணங்
கரைந்திடக் கருணைசெய் கறையில்
லருவிக ளடரு மருணையம் பரனே!
அஞ்ச லஞ்சேலென அபயந்
தருவையேல் தவிப்பு தவிர்த்துதா னுகிச்
சாந்தியைச் சார்குவன் தனியே!.

தனிப்பெருந் துறையே! தாய்தமர் குருவாஞ்
சச்சிதா நந்ததண் ணளியே!
இனித்திடு மினிப்பே! யிறைஞ் சிறைஞ் சிறைஞ்சி
யிழுக்கொழி வித்திட வருளாய்
பனிவரை யருணைப் பரமனே! பதிதன்
பாழ்மனம் பதைபதைத் தயா
நினைப்பையே லெந்த நிழல்நிலைத் திடுவே
னின்மல மானமா நிலையே!.

முற்றிற்று.

தீபதரிசனச் சரித்திர சுருக்கம்.

சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான சச்சிதானந்த சுயம்பிரகாசமாம் ஸ்ரீ. கைலாச பரமபதி ஒவ்வொரு ஆன்மாக்களும் உஜ்ஜீவிக்கும் வண்ணம் எழுந்தருளிய பல திவ்ய தலங்களுள் மகத நாடாம் நடுநாட்டிக்குள் நடுநாயகமாகியதும், ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த சுவாமிகளாலும், ஆளுடையவரசாம் திருநாவுக்கரசு சுவாமிகளாலும், ஆளுடைய அடிகளாம் மணிவாசகப் பெருமானாலும் என்பு நெக்குருகப் பாடியருளிய திருப்பதிகங்களா லலங்கரிக்கப் பெற்றதும், சதுர் யுகங்களில் முறையே அக்கினி மலையாயும், சுவர்ன மலையாயும், தாம்பிர மலையாயும், கன் மலையாயும் திரு வுருவங்கொண்டதும், கௌரி நகரம், முத்திநகரம் தேசு நகரம், சோணசலம், சிவலோகம், என்னும் பற்பலவாந் திருநாமங்கள் படைத்ததும், பார்வதி தேவியார் திருவவதார மானதும், ஆன்ம கோடிகளனைத்தையும் அளிக்கும் அவ்வரவாபரணனை மலையடிவமா யமையப் பெற்றதும் பரமபதியின் திருநேத்திரங்களைப் பார்வதாதேவியார் புதைத்தருளியதும், மடக்கொடி இடப்பாகம் பெற்றதும், வச்சிராங்கத பாண்டியன், கலாதரன், காந்தி, காலி, புரந்தீபன் முதலியவர் கிடைத்தற் கரிய பேறு பெற்றதும், வள்ளல்களில் வள்ளலாராகிய வல்லாள மஹாராஜன் தன்னைச் சோதிக்க வந்த சுவாமியையே சுதனாய்ப் பெற்று புத்ர சோகந் தீர்ந்ததும், இந்திரதீர்த்த முதலிய மஹாதீர்த்தங்கட் கிடமானதும், பிரமனாதிய தேவர்கட் கருளியதும்,

இரவிகள் சந்திரர் வயிரவர் விஞ்சைய ரிமையவ ரெண்டிசையோ
ருரக ரருந்தவர் முனிவரா பங்கய ருவண நெடுங்கொடியோர்
பரவி நெருங்கலி லுலக நிறைந்தவர் பணியு மிடங்கிடையா
தாகர வென்பது கடலின் முழங்கிய தருணை வளம்பதியே.

கோடானுகோடி சூரியர், சந்திரர், வயிரவர், வித்யாதரர், தேவர், அஷ்டதிக்குப்பாலகர், நாகர், தவத்தோர், முனிவர், பிரமர், விஷ்ணுக்கள் வணங்க ஆழாழியின் சத்த மடங்க அன்புடனேதும அரகர வெனனுஞ் சத்தத்தையுடையதுமாகிய அருணசலம் என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் முன்னொருகற்பத்தில், பிரமனும், விஷ்ணுவுந் தாம், தாம், பிரமமென்னும் பிரமவாத முண்டாய் யுத்தஞ்செய்கையில்,

ஊருவன தத்துவன செல்வன விண்ணோடே
சேருவன நின்றன திரிந்தன திரட்டார்
தாருவகை யிற்றன தழைந்ததிரு ளெங்கு
மேருவரை யுக்கசெழு வேலையள றாக.

ஊர்வன, தவழ்வன, நடப்பன, முதலியவைகள் விண்ணில் பறக்க வாரம்பித்தன, தேவதருக்கள் முதலியவைகளும் பொடிப்பொடியாயின, மஹாமேரும் அசைந்தது, "ஈதன்றி கலக்கினுந் தண்கடல் சேறாகாது" என்பதற்கு மாறாய்ச் சத்த சமுத்திரங்களுஞ் சேறாயின.

அந்தமுடி வெல்லைதனி லஞ்சியிமை யோர்தா
மிந்திரனை யெய்தினர்க ளெய்திய துரைக்கு
முந்தியவ னுற்றதுயர் யாவையு மொழிந்து
வந்தவர வேதென வகுத்துரைசெய் கினறார்,

தேவர்கள் முதலிய யாவரும் நடுகடுங்கி, தேவேந்திரன் பாற் சென்று எம்மிறையே! யென்று தங்கடங்கள் குறைகளைச் சொல்லு முன்னரே அவன் பிரம வாதத்தினால் தனக்கு நேர்ந்த குறைகளைச் சொல்லி நீங்கள் வந்தகாரியமியாதென, அவர்கள் பிரம, விஷ்ணுக்களுக்கு நேர்ந்த பிரம வாதத்தினால் விளைந்த யுத்தக் கொடுமைகளைச் சொல்லி முறையிட அகநீந்து ஆண்டவனேதுணை யென்பதை யறிந்த தேவேந்திரன் அவர்களை யழைத்துக் கொண்டு சிவசந்நிதியை யடைந்து.

நாயக னிசைந்து பினர் நாகவுல கத்தோர்
தூயமலர் போலடி துதித்தரிவை பாகா
மாயமுடன் மாலயன் வருத்தமது தீராய்
தாயலது மைந்தர்துணை தாரணியி லுண்டோ

எங்களை யாட்கொள வெழுந்தருளிய இறைவனே! பிள்ளைகட்குத்தாயே யன்றி வேறு துணையு முண்டோ ஆதலால் சர்வ ஜீவகோடிகட்குந் தாயகமாகிய தேவரீரையன்றி எங்களுக்கோர் துணையுமுண்டோ? என்றிறைஞ்ச அவர்களை தேவதேவன் கருணையுடனோக்கி,

நடுக்கமுறு முனிவரெலா மமரரெலாம் பயந்தவிர நாகமீது
படுக்கைபுரி திருமாலும் பங்கயத்தி லுறுமயனும் பகைமை தீர
வடுக்கியிடும் புவனமெலா மடுக்கழியா திருக்கமனத் தருள்வ தாகித்
தடுக்கரிய தழலுருவத் தொருவரையா யிருவரையுந் தடுப்ப தானான்

தேவர்களுடைய பயம் நீங்கவும், திருமாலும், பிரமனுங்கொண்ட பகைமை யொழியவும், நிலைகுலையும் அண்ட அடுக்குகளெல்லாம் அழியா திருக்கவும், அக்கினிமலையாய் பிரமவிஷ்ணுக்களின் மத்தியில் எழுந்தருளினார். அதனைக்கண்ட பிரமவாதிகளாகிய பிரமனும், விஷ்ணுவும்.

கண்ணிலள விடவரிய சுடரினைக்கண் டிருவருமாய்க் கவலை யானா
ரெண்ணலிதி னடிமுடியை யறிபவரே பெரியவரென் றிசைத்தா ரிந்த
மண்ணினடி யறிவனெனப் பணியிடையிற் றூக்கமிக்கோன் வராகமானான்
விண்ணின்முடி யறிவனென வெகினவடிவெடுத்தயனும் விரைந்துபோனான்

கண்களினா லளவிடற் கரிய அக்கினிமலையைக் சண்டு இருவரும் அஞ்சி நடுநடுங்கி சிறிதுதேறி இக்கிரியின் அடியையேனும், முடியையேனும் அறிகிறவரே பெரியர், அவரே பிரம்மமெனத் தங்களுக்குள் தீர்மானித்துக் கொண்டு, பையரவப் பாயலானாகிய பதுமநாபன் இம்மலையி னடியை யான் காண்பேனென வாரகவடிவானான், அதைக்கண்ட தாமரைத் தவிசில் வீற்றிருக்கும் பிரமன் இதன் முடியை யான் காண்பேனென அன்னமாய் ஆகாயத்திற் பறந்தான், இவ்வாறு அவதரித்த இருவரில் வராக அவதாரியாகிய மஹாவிஷ்ணு ஓர் நிமைப்போதில் கீழே ழுலகத்தையுங்கடந்து, கண்ணுங் கருத்துமாய்த் தேடியுந் திருவடியடையாது திகைத்து ஏங்கி, எங்கி,

தம்போரை முதற்றடுக்கத் தழற்பிழம்பா யெழுந்தவந்தத் தலத்தைச் சார்ந்தா
னம்போத னிதன்முடியி னளவறியா னெனமனத்தி லையந் தீர்ந்தா
னம்போருக் கரியானைச் சேயானைத் தனதுவிழி நயனத்தோடே
பைம்போதைப் புனைவானைப் பலகாலும் பணிந்துருகிப் பரவி நின்றான்.

தம்முளெழுந்த கலகத்தை நீக்கும் பொருட்டுத் தழல் வண்ணனாய் நின்ற அத்திருத் தலத்தையே மீண்டு மடைந்து, ஒப்பற்ற இத்திருமலையின் திருமுடியை இவ்வற்ப பிரமனா அறிபவனெனப் பேரானந்தங்கொண்டு, நம் பாதவர்க ளறியானை, துரியமுங் கடந்துநின்று தூர தூரமாயிருப்பானை, தனது கண்களென்னும் புட்பங்களுடன் அழகிய கொன்றைப் புட்பங்களைத் தரிப்பானை, திரிகரண சுத்தியாய் நாத்தழும் பேற ஓயாது தோத்திரஞ்செய்து கொண்டு நின்றான். அச்சமயத்தில் திருமுடியைத் தேடிக்கொண்டு சென்ற பிரமனோ வென்னில், மேலேழுலகமும் அதற்கப்பாலும் பறந்து பறந்து ஓய்ந்து ஒடுங்கி ஐயையோ! என்னுடன் வாதஞ் செய்த அவ்விஷ்ணு திருவடியைக் கண்டிருப்பானோ! யானவனுக்கு தோற்பேனோ! வென்று பலவாறு எண்ணாதுமெண்ணி ஏங்கியிருக்கும் வேளையில் ஆகாயத்தி லிருந்து வரும் ஓர் தாழம்பூவைக் கண்டு என் ஆருயிரன்ன தாழம்பூவே! நீயெங்கிருந்து வருகிறாய் நிஜத்தைச் சொல்லென அதற்குத் தாழம்பூ, அடியார்க்கெளியனாகிய ஐயனே! யான் சர்வ ஜீவதயாபர சச்சிதாநந்த பரம சிவத்தின் திருமுடியிலிருந்து தவறி வீழ்ந்து வருகிறேன். யான் புறப்பட்டு நாற்பதினாயிரம் வருடமாயும் இன்னும் பூமியிற் போகவில்லை, என் அங்கமெலாம் நொந் தயர்ந்திருககிறேனென வருந்த அதைக்கேட்ட பிரமன் ஆ! ஆ! நமக்கு நற்காலம் வாய்த்து விட்டது, நாமே அகங்கொண்ட அந்த அந்திவண்ணனை ஜெயிப் போம் யாது மாக்ஷேபனை யில்லையென நித்தியதரித்திரன் நிதிக்குவை பெற் [illegible]போ லக மகிழ்ந்து,

சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கோளல்.

என்ற வேதவாக்கியத்தின் படி இழிந்தாரிடத்துந் தோல்வி யடைதல் சிறப்பென உன்னுது, தானே ஜெயிக்கவேண்டு மென்னுஞ் சித்தப்பிரமைகொண்டு பொய் பேசும்படி பொருந்தி, எனதருமைத் தாழம்பூவே! சொல்லற்கரிய துன்பத்தால் துவளும் என்னை இச்சமையத்தில் ஆதரிப்பது உன் பாரமேயாம். "ஆபத்து வேளை தன்னில்—அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொருபிதா" வெனுமாறு என்னை யீன்ற பிதாவும் நீயே யாவாயெனப் பற்பலவாய் இரக்க, தாழம்பூவும் மனமிரங்கி சுவாமி! ஏழையினுலாம் விதம் தயை செய்யில் யானவ்வாறே செய்வேனென, பிரமன் சந்தோஷசித்தனாய்த் தனக்கும், விஷ்ணுவுக்கும், நேர்ந்த பிரமவாதமியாவையும் மணிக்கோத்ததுபோ லொன்றையும்விடா துரைத்து, தான் இத்திருமுடியைக் கண்டதாக விஷ்ணுவினிடம் பொய் சொல்லும்போது நீயும் ஆமிவர் கண்டதுண்மையென சாக்ஷியஞ் சொல்லவேண்டுமென இரும்பை யுருக்கி இருசெவியிலு மூற்றியது போல் இம்மஹாபாவமான மொழியைக்கூற, இதனைக் கேட்ட தாழம்பூ உள்ளம் பதைபதைத்து,

யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத் தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

மெய்போன்ற வேறு தருமங்களில்லையென்னும் சத்தியத்தை யறிந்துஞ் சிறியரே மதிக்குஞ் செல்வத்தின் பொருட்டு அற்பர்கள் அவலமாய்க் கையாடும் பொய்யை நாம் கையாடுத லழகாமா?

சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

சிறந்த செல்வம் பெறினுந் தீமை செய்யாமை பெரியோர் கொள்கை யென்னும் வேதத்தை விலகுதல் விவேகமாமா? ஆதலால் சுவாமி! தமது திருவுளப்படி பொய்சாக்ஷிக் குடன்படேனென பலவாறு மறுத்தும், பிரமனொப்புக்கொள்ளாது, சத்திய விரதனாய்க்காட்டிக்கொள்ளுந் தாழம்பூவே! என்னை இச்சமையம் எவ்வாறேனுங்காக்கவேண்டுமெனப்பரிதாபமா யிறைஞ்சி, யிறைஞ்சி வேண்ட, மேல்விளைவதை யறியாத் தாழம்பூவும் பரிதானம் வாங்குஞ் சேவகனைப்போலும், பரிதாப மற்ற வைத்தியனைப் போலும், சுவாமி! தேவரீர் சித்தத்தின்படி செய்கிறேனென பிரமனுக்கிரு செவியிலும் ஆபரணமெனப் பூட்டிவிட்டது. அவ்வசத்தியத்தைக் கேட்ட பிரமன் அப்போதே அந்நாரணனது இறுமாப்பை யொழிப்பேனென இருதோளும் பூரிக்க, எல்லாம் வல்ல இறைவன் செயலேயென யேங்கி யிருக்கும் நாரணனிடம் ஓடோடியும் வந்து,

சோரா கேட்டிபென் வாவின் செய்கையை
காதநூ ருயிரங் கணத்தி லேசுடங்
சாதியான் முடியறிந் சுனுகி னேனென
வோதினுன் கைதையு முள்ள தென்றதே.

ஓ! ஓ! திருமாலே! என் சாமர்த்தியத்தைக் கேட்கக் கடவாய், ஒரி மைப்போதில்நூறுயிரங்காதஞ் சென்று எல்லாவற்றிற்கும் ஆதியாம் இறை வன் திருமுடியைக் கண்டேன், என்னை நம்பாவிடில் இதோ சிற்கும் அதிம ணம் பொருந்திய தாழம்பூவைக் கேளென உடனே தாழம்பூவும் 'கண்டொ ன்று சொல்லேல்' என்பதை மறந்து ஆம், ஆம், பிரமதேவர் இறைவர் தி ருமுடியைக் கண்டது உண்மை, உண்மை, யென உளறியது. உளறிய அக் கணமே,

அக்கண மழற்கிரி வெடித்தது வெடித்தவா வத்தினி லரக்கரிமையோ
ருக்கனர் திசைக்களிறு கக்கின வரக்கரை யுருக்கிய தெனக்குருதிசீர்
செக்கரொளிமட்கிடமருக்கிதழ்கறக்குமெய்சிவப்பொளிவெளுத்த வடிவாய்
முக்கண னதற்கிடைமுளைத்தனன்முகத்திலவன் முப்புரமெரித்த நகையே.

முண்டக வகந்தையின் மொழிந்தவுரை நன்றென
மொழிந்து நகை கொண்ட வளவே
அண்டபகி ரண்டமு நடுங்கின வொடுங்கின
வடங்கின விடுஞ்சுட ரெலாம்
கொண்டலு மறைந்தன சிறந்தன விறைந்தன
குறைந்தன நிறைந்த னருவா
வெண்டிசை திரிந்தன கரிந்தன பொரிந்தன
வெரிந்தன விரிந்த தருவே.

அசுரருந் தேவரும் அயரவும், அட்டதிக் கயங்களும் அழிந்தோம் அழிந்தோம், என அலைந்து உதிர வெள்ளத்தைக் குபீர், குபீர், எனக்கக்க வும், வானத்தி னொளிவாடவும், கோடானுகோடி பேரிடிகள் ஒன்று சேர்ந் து இடித்ததை யொத்த சத்தமுண்டாய் அவ்வக்னிமலை பிளவுபட்டு, அதினி ன்று முருக்கம்பூ விதழ் கருக பொன்னுர் திருமேனி திருநீறுல் வெளுப் பேறமுன் முப்புரத்தைத் தகித்த புன்னகை பொலியுமுகத்தராய், ஓ பிர மனே! நீ அகங்காரத்தினுற் பிதற்றிய சொல் வெகு அழகாயிருக்கிறதெனப் புன்னகை புரிந்தபோது, அண்ட பகிரண்டங்களெல்லாம் கிடுகிடென நடுங் கி யொடுங்கி அசைவற்றுப்போயின, சோம சூரியாக்கினிகளின் சுடர்கள் சுருங்கின, மேகங்கள் மறைந்தன, நிலைத்த யாவும் நிலைகுலைந்தன, மரங்க ளெல்லாங் கரிந்தும், பொரிந்தும், எரிந்தும் போயின.

149607
-600 008.
O23:38'2113T
N10

அழிந்தன னயனென வமர ரஞ்சினர்
குழிந்தது நிலமெனக் கொள்ளை யாமலர்
பொழிந்தனர் நெடியவற் குவகை பூத்தது
கழிந்தது மலரவற் கிம்மை கந்தலை.

பாடினான் பரவினான் பரவ சத்தினா
லாடினா னோடினா னளவி டாமுதலை
கூடினே னெவ்வரங் கொள்ளு கென்னத்
தேடினான் சிவனையத் தெளிந்த செங்கண்மால்.

ஆசையா லுருகுமவ் வரித னன்புகண்
டீசனும் பலவர மினிது நல்கினான்
வாசமா மலரவ னுனக்கு மண்ணின்மேல்
பூசையுங் கோயிலும் போக வென்றனன்.

கைதையை யிவனொடு கரவுநீ யுரை
செய்ததாற் றீண்டிலை யென்று தீர்த்தனை
னெய்திய முனிவுகண் டேங்கி நான்முகன்
மெய்தளை யுறப்பதம் வீழ்ந்து போற்றினான்.

அந்த கூடியிருந்த தேவர்களியாவரும் இன்றே பிரமன் அதோகதி யாயின னென்றஞ்சி பூமி பள்ளமாம்படி கொள்ளை கொள்ளையாக புட்பமாரி பொழிந்தனர், பிரமனுக்கும் அகங்காரமென்னும் அக்காரம் பறந்தது. அச்சுதனும் ஆனந்தக் கடலிலாடினான். அதைக்கண்ட எம்பெருமான் நாரணன் பக்திவலையிற்பட்டு அவன் விரும்பிய வரமெயாவு மீந்து, பிரமனை நோக்கி ஏழைமதியுள்ள ஏ பிரமனே! நீபொய்சொன்னமையால் இன்றுமுத லுனக்கு பூமியிற கோயிலும் பூஜையுமில்லாமற் போகக்கடவதெனச் சபித்து, தாழம்பூவை நோக்கி, ஏ தாழம் பூவே! கொஞ்சமேனும் அஞ்சாது நீயும் பிரமனுக்குடன்பட்டு பொய்சாக்ஷியஞ் சொன்னதா லுன்னை இதுமுதல் தீண்டேன், அப்பால் விலகென ஆணையிட்டார், அதைக்கண்ட பிரமன் நடு நடுங்கி முப்பத்திரண்டுறுப்பும் நிலமுறப்பணிந்து,

பொடிமூடிய தழலேநிகர் புலையாணவ மலமாஞ்
செடிமூடுகை யாமேல்புழல் சிறியேனொரு பொருளோ
வடிவே! பெருவெளியே! சதுர் மறையே! சதுர்மாமறையின்
முடிவே! தனி முதலே! யெனை முனியேலலனை நீயேயென்.

எந்நீர்களு மொன்றாகிய வெழுவாரியு மருவி
வெந்நீரது வானாலுடன் விளையப் புனலுண்டோ
நின்னீர்மையி னெதன்றாலுல குயிர்செப்படி நிகழும்
முன்னீர்விட முண்டோ! யெனை முனியேலலனை முனிவே?

பிறையே முழு மதியேயுறை பெண்ணே பிறவானே
நறையேநறு மலரேயென நானுவித மாலை
பொறையேதிரு வருளேமொழி புகலேயபய விசையே
முறையேபல முறையே!யென முனியேலென முனியேல்.

வெம்மைச்சர மலராகிய வில்லேவள் தனுவன்றே
கொம்மைத்தலை மதவாரெழு கோபகனி றன்றே
செம்மைக்கன லன்றேவாலை செயுமந்தக னன்றே
மும்மைப்புர மனறேயொரு பொருளாயென முனியேல்.

எனப்பலவாறு துதிசெய்து என்னையீன்றவனே! கோபியாதேயும் கோபியாதேயும் என்றிறைஞ்ச, சுவாமிப் திருவுளமிரங்கி பிரமனே! நீ யஞ்சற்க, யஞ்சற்க வென்றபையஸ்த மருளி, பூமியில் பிராமணர்களுக்குச் செய்கின்ற பூசையை நின் பூசையாகக் கொள்ளக்கடவாய். மேலும்,

இத்தலத்தி லுமக்குவரங் கொடுத்தலினுல் யோசனைமூன் றெல்லை தூரஞ்
சுத்தபவித் திரஞானத் தலமாகப் பொலிகவிந்தச் சோதி தானுஞ்
சித்துருவ மலையாகி வரமுதவக் கடவதின்பஞ் சிறந்த தான
முத்திதனைத் தகையாம லுதவுவதற் கருணபுரி மொழிபு நாமம்.

வாதைபடு மிந்திரனு மிமையவரு நினைக்கவவர் வருத்தந் தீர்த்தோம்
ஆதலிரு வித்தலத்தை நினைப்பவர்க்குப் பிறப்பிம்மை யகற்றுவோமிப்
பூசாமு மித்தலமும் பிரளயத்து மழியாத பொருப்ப தாகி
மோதியகாற் றடைந்திசைச் சாரசரங் களையுமுயபர் முத்தி சேர்க்தம்.

வையகத்தி லரியதவம் புரிந்தவருக் கினியமுத்தி வழங்க வேண்டிச்
செய்ய வித்தத் திருநகரி லவதரிகக வரந்தருவோஞ் செய்த தான
மெய்பெறவொன் ருயிரமாய் வளருமிதிற் கொடும்பாவம் விளையா தீதை
யையமெனை வுணர்வார்க்குப் பாகதிகிட் டாதுநம தாணை தானே.

அண்ணலிவை மொழியளவி லழற்றூண மதுதறு ஃயசல மாகி [சொல்வார்
வண்ண நெடுஞ் சுடர்விரிந்து விளங்குதல்கண் டயன்றிருமால் வணங்கிச்
விண்ணவர்க்கு மெங்களுக்கு மிதன்சோதிக் கெதிர்நருகி விழிக்கப் போகா
தெண்ணரிய சுடர்கொல்லா முடக்ககாந்த மலையாக விருக்க வென்றூர்.

அன்னமிசை வருவானுங் கருடன்மிசை வருவானு மமல மூர்த்தி [கார்
வன்னியொளி மறைத்து மற்றை மலையாக விருத்தியென மலையாச் செய்
சென்னியிலே யொருசோதி யனுதினமுந் தெரியவருள் செய்வா யென்று
ரென்னுமந்த வடியவர்க்கா விறையவனு மிரங்கியிவை யியம்ப லுற்றான்.

கார்த்திகைக்குக்கார்த்திகை நாளொருசோதி மலைநுனியிற்காட்டாநிற்போம்
வாய்த்தவந்தச் சுடர்காணிற் பசிப்பிணியில் லாதுலகில் மன்னி வாழ்வார்
பார்த்தவர்க்கு மருந்தவர்க்கு மிடையூறு தவறுமிது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தி லிருபத்தோர்தலை முறைக்கு முத்திபரங் கொடுப்போமென்றார்.

மாணபவ மறுக்கநல்ல மருந்தாகு மதற்கு மலை மருந்தென் றோரே
யருணவடி வாதலினா லருணகிரி யெனுமொருபே ரதனை யோர்கால்
தரணியிலே யுரைத்தவர்க்கு முக்கோடி யஞ்செழுத்துச் சரித்த தாமென்
றிருணிலவு மிடற்றிறைவ னிசைக்க மகிழ்ந் திறைஞ்சியவ ரிசைப்ப தானார்.

அடுத்தருண கிரியானே யுனக்குவிண்ணீரலதுபுன லாட்டுவா ரார்
தொடுத்தவுடுத் திரளலது திருமுடிக்கு பணிமாலை சூட்டுவாரார்
கடுத்திகழு மிடற்றானே கதிர்களன்றி பணித்தீபங் காட்டுவாரார்
எடுத்திறைஞ்சிப் பூசைசெய்ய விதன்கீழோரிலிங்கவடி வெடுப்பா யென்றார்.

அன்னதுவா யிருக்குது நீர் காமியத்தி லருச்சியுமென்றசலம் புக்கா
ரெங்கிலமும் புகழவங்கோர் சிவனுருவ முளைத்ததுகண் டிறைஞ்சி யேத்தி
மன்னியபூ மழைபொழிந்து பரவசமாய் மகிழ்ந்தாடி மயனைக் கூவித்
தன்னிகரில் கோபுரமு மண்டபமு மணிமதிலுஞ் சமைப்பித்தார்கள்.

பிரம விஷ்ணுக்களே! உங்களுக்கித் தலத்தி லருளியதா விதைச் சுற்றி மூன்று யோசனை சுத்த பவித்திரமாயிருக்கும். இவ்வக்கினிமலை சூழுகும், முக்தியைக் கொடுக்கும் இத்தலம் அருணை யென்னப்படும். தேவேந்திரனுக்கும், தேவர்களுக்குந் துக்கத்தை தீர்த்ததுபோல் இதை நினைப்பவர்களின் பிறவிப் பிணியை யொழிப்போம், இதிலதவசிப்பவர்கள் வரம் பெறுவார்கள், ஈங்கு செய்யுந் தருமம் ஒன்றாயிரமாம், இதிற் சந்தேகங்கொள்பவர் முத்தியடையா ரென்றருளிய காலை, மலைநுறுகி மஹாகோடி கிரணங்களுடன் பிரகாசிக்க பிரமவிஷ்ணுக்க ளதனைத்தரிசிக்க ஆற்றலிலாராய் அடியற்றபனைபோல் சுவாமியின் பாதபங்கயங்களில் வீழ்ந்து சுவாமி இச்சோதியைத் தரிசிக்க எங்களாலும், மற்றுந் தேவர்களாலு மியலாதாதலினால் தேவரீர் இச்சோதித் திரளைச் சுருக்கி ஒரு சிறிய மலைவடிவா யதன் திருமுடியி லெந்நாளும் ஓர் சோதி யருளவேண்டுமென் றிறைஞ்ச, அடியார்க் கெளியராகும் அண்ணலவர்கட்கிரங்கி, பிரம விட்டுணுக்களே! நீவீர் கருதியவாறு கார்த்திகைமாதம், கிருத்திகை நக்ஷத்திரத்தில் ஓரொளிகாண்பிப்போம், அவ்வொளியை தரிசிப்போரொவ்வொருவரும் பசி முதலிய துன்பங்களொழித்து முத்தியடைவார்கள். அவர்களிருபத்தோர் தலைமுறைகளும் முக்தியை யடைவார்கள். இம்மலை பிறப்பிறப் பறுக்குமருந்தானதா லிதற்கு மலைமருந்து என்றும், சிவந்த நிறமானதா லிதற்கு அருணகிரி யென்றும் பெயராம், அதையோர்தரம் உச்சரித்தவர்கள் பஞ்சாக்ஷர மஹா மந்திரத்தை மூன்றுகோடி தரம் உச்சரித்தவர்க்கு சமானமாவரென்றருள, அதற்கவர்கள் எங்களையாளு மிறைவனே! தேவரீர் திருமலை வடிவாயிருப்பதி

ணல் எங்களால் அபிஷேக முதலியவைகள் செய்ய முடியாதாகையால், தே வரீரிதன் கீழோர் சிவலிங்கவடிவமா யெழுந்தருள வேண்டுமென்ன சுவாமி யுமவ்வாறே திருக்கோலங் கொண்டருள, அவர்கள் மிக்க சந்தோஷசித்த ராய் மயனென்னுந் தெய்வத்தச்சனால் கோபுரங்கள் முதலியவைகளியற்றுவி த்து தந்தையு மகனும் பதினாயிர வருடந்தவமியற்றி பிறகு சுவாமியினிடத்தில் விடைபெற்று தத்தம திருக்கைக்குச் சென்றனர். அத்திருமலையில் தேவர் முதலியவர்கள் அருபிகளாய் பிரதக்ஷணஞ் செய்வதால் அசௌசாதியை வாக னமுதலியவைகளின்றிப் போய்தரிசித்து மானத பூஜை செய்கிறவர்கள் கி டைத்தற்கரிய பேறுகளைப் பெறுவார்கள். ஒப்புயரற்ற பரமசிவம், சூராதி சூரர்களைச் சூறையாடிய சுப்பிரமணியக் கடவுளை நோக்கி,

செம்மலை யுருவா நம்மைத் தினம் வலம் புரிந்தோர் வேதன்
றம்மினு மதிகமாவோன் றனக்குமே லதிகம் பார்க்கி
லும்மினு மதிசரித்த வுமையினு மதிக மைந்தா
எம்மினு மதிகமென்று மெவர்க்குமே லதிக மானோன்.

ஓ என்னன்புள்ள மகனே! அக்கினிமலை யுருவாயிருக்கும் நம்மை அ னுதினமும் வலம் வருவோர் பிரமா, விஷ்ணு, உமையவள், நீ, நான், ஆகி ய யாவருக்கும் அதிகமானவரென் றருளிச் செய்ததால் அத்திருமலையின் பெருமையை யளவிடற் கசாத்தியம் ஆகலால் நாமெல்லோரும் அக்கா லத்தில் அத்திருவண்ணாமலைக்கு ஆகமவிதிப்படி உள்ளும் புறமுந் தொழுது செய்வன திருந்தச்செய்து தெவிடா வின்பத்தைப் பெற்றுய்யக் கடவோம்.

சர்வாலய தீபதரிசனம்.

முன்னொருகாலத்தில் ஸ்ரீ கைலாயத்தில் சிவபெருமான் உலகமா தாவாகிய பார்வதியம்மையாருடனெழுந்தருளியிருக்கையி லாங்கு பலவ ரிசையெரிந்த தீபங்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கின அச்சமையத்தில் பூர்வ புண்ணியத்தினாலும், பசியினாலுந் தூண்டப்பட்ட ஓர் எலி ஆங்கு பிரகாசித் துக் கொண்டிருந்த ஓர் தீபங்களுள் அணைந்து போகுந் தறுவாயிலிருந்த ஓர் தீபத்தில் வாயிட, ஒன்றை நினைக்கி லது வொழிந்திட்டொன்றாமாறு, அதி லிருந்த திரி தூண்டப்பட்டு பிரகாசமாக, இதனைக் கண்டருளிய சிவபெரு மான் மனதிரங்கி அவ்வெலிக்கு தானவசரீரமும், அதிபாக்யமும், அரசுரி மையும் வாய்க்குமாறருள, அஃதவ்வாறே மாபலிச்சக்கிரவர்த்தி என்னும் பெயருடன் பூவுலகில் ஜனித்தது. ஜனித்த அச்சக்கிரவர்த்தி,

ஏழற் றவரினு மேழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

என்னும் வேதவிதியைப்போல், தனித்திருந்து பலர் பகையைக் கொள்பவன் பித்தரினும் பேதையென வறிந்து யாருடனும் விரோதமில்லா னாய்,

படைகுடி கூழ் அமைச்சு நட்பாணாறு
முடையா னரசரு ளேறு.

...னைப்படி சேனை, நாடு, பொருள், அமைச்சு, நட்பு, அரண் முதலிய அங்கங்களையு மடைந்து அரசு செலுத்திக் கொண்டு வருகையில், ஓர் நாள் சிவதரிசனத்தின் பொருட்டு சர்வாடம்பரனாய்த் தனது பரிவாரங்களுடன் சிவ சந்நிதியை யடைந்து சிவபெருமானை பிரதக்ஷணம் வருகையில் பெருமான் இவன் செருக்கைக்கருக்கத் திருவுளங் கொள்ள, ஆங்கெரிந்து கொண்டிருந்த தீபத்தினின்றோர் துளி நெய் யிவன்மேற்பட்டு அதே காரணமாய் சிங்கி பட்டோர் தேகம்போ லுடல் முழுதும் விரணங்களுண்டாய் எவ்விதத்தினுந் தீராவியாதியாய் நெடுங்காலந் தியங்குகையில் ஓர் நாள் சிவபெருமான் மனமிரங்கி, ஏ சக்ரவர்த்தியே! நினதகங்காரத்தை யடக்க இவ்வாறியற்றினோமாதலால் நீ இன்று முதல் சிவாலயங்கடோறுந் தீப மேற்றி, வருவையேல் இம்மையில் இந்நோயகன்று சகல போக பாக்கியங்களும் பெற்று, மறுமையில் சிவசாயுச்ய மடைவாயென்று அசரீரியா யருளினார் அதுமுதல் மாபலிச் சக்கிரவர்த்தி ஒவ்வொரு சிவாலயங்களிலுஞ் செய்த் தீப மேற்றும்படி கட்டளையிட்டான். இவ்வாறித் திருப்பணியை உலோபமில்லாது நடாத்திக்கொண்டு வருங்கால் இவன் தொண்டிற்குள மகிழ்ந்த சோமசுந்தரன், கார்த்திகைமாதம், பூர்வபக்ஷம், கார்த்திகை நக்ஷத்திரத்தில் தேஜோமயமா யெழுந்தருளி சக்ரவர்த்திக்கு சிவசாயுஜ்ய மளித்தனர்.

சிவதரிசனைக்கு வந்த தேவர்கள் அச்சோதியைக்காண ஆற்றலிலாராய் அவ்வுஷ்ணம் அடங்குமாறு பொரி, அவல், நிவேதித்தார்கள். இவ்வைபவத்தை நினைவுகூர்ந் துய்யுமாறு இன்றும் கார்த்திகைமாதம் பூர்வபக்ஷக் கார்த்திகை நக்ஷத்திரத்தில் சிவத்தலங்கடோறும் தீபம் வைக்கவும், சொக்கப்பானையென மருவும் சுடகப்பனையுங் கட்டுகிறார்கள்.

கிருத்திகை நக்ஷத்திரத்திற்கு முன்னாள் பரணி நக்ஷத்திர மாலை அதிவாசதீபத்தில் அக்கினிகாரிய முதலியவைகளின் மூலமாய் மஹாலிங்க மூர்த்தியை ஆவகானித்து அத்தீபத்தை சுவாமி சந்நிதியிலேயே பூசித்து வைத்து, மறுநாள் உத்தமமாகிய தென்னை, மத்திமமாகிய பனை, அதமமாகிய பாக்கு, அதமாதம மாகிய வாழையும், மூங்கிலும், இவைகளி லேதேனுமொன்றை உத்தமமாகிய சுவாமியின் கர்ப்ப கிருகத்து உயரமேனும், மத்திமமாகிய அதன் கழுத்தினளவேனுஞ் செய்து அதன்மீது உலர்ந்த தென்னோலை, பனையோலை, பாக்கோலை, வாழைச்சருகு, தாழஞ்சருகு, இவைகளி லேதேனு மொன்றைச் சேர்த்து விமானம்போற் கட்டி, மறுதினம் அர்த்த சூரியமண்டலத்தில் ஆலயத்திற்கும் இந்திரதிக்கிற்கும் மத்தியில், பிரமஸ்தானத்தில் நாட்டி, மறுநாள் கிருத்திகை நக்ஷத்திரத்தில் பஞ்சமூர்த்த சமேதமாய், சோமாஸ்கந்த மூர்த்தியை உத்ஸவாலங்காரத்துட னெழுந் தருள்வித்து, ஷை தீபத்தை சுவாமிக்குமுன் வரச்செய்து சம்ஸ்காரப்படுத்தி, அத்தீபத்தை யந்ததண்டத்தின்மீது வைத்து சருகுகளைக் கொளுத்தி, சருகுகளெரிந்தபின் ஷை தண்டத்தைச் சோதித்து அச்சோதியை அழல்வண்ணன் எனவே திரிகரண சுத்தியாய் தரிசிப்பவர்கட் கிம்மையில் மாறாச் செல்வமும் மறுமையில் சிவசாயுச்யமுங் கிடைக்கும். மலையையடுத்த தலங்களில் நக்ஷத்திரம் பிரதானமாயும், கடலையடுத்த தலங்களில் பௌர்ணமி திதி முக்கியமாயும் தீபம் வைக்கவேண்டியது.

சுபம்! சுபம்!

அ. குழந்தையானந்த நாயனர்,

ஸ்ரீ. திருவள்ளுவ நாயனர் சங்கத்தலைவர், சேலம்.

ஸ்ரீ நாயனர் அச்சுக்கூட விளம்பரம்.

உள்ளூர் வெளியூர் கண்ணியர்களுக்கு வந்தனத்துடன் தெரிவிப்பது

ஷை அச்சுக்கூடத்தில் தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ் முதலிய பாஷைகளில் எவ்வித அச்சுவேலைகளேனும், எவ்வித பயிண்டு வேலைகளேனும், சுவல்ப கூலியில் நவீன நாகரீகத்தை யநுசரித்து, உறுதியாயும், அழகாயும், காலந்தவறாது செய்து கொடுக்கப்படும்.

வெளியூர் வேலைகளை தக்ஷணமே கவனிக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்திருப்பதால், அவர்கள் தங்களுக்கு வேண்டிய வேலைகளை உடனுக்குடனே செய்துகொள்ளலாம். பாதிக்கிரயம் முன்பணமாக அனுப்பும் வெளியூரார்கட்கு அவர்களுக்கு வேண்டும் எந்த சாமானும் உத்தரவாதத்துடன் V. P. யிலனுப்பப்படும்.

ஔவையார் அருளிய விநாயகரகவல் வேழமுகம் பூஜாவிதி சகிதம் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் சுத்தமாகப் பதித்தது. விநாயக விரதிகளாகும் புண்ணியோத்தமர்களுக்கு அவசியமானது. விலை அணா 1. விநாயகர் சகஸ்திர நாமார்ச்சனை (அச்சில்) இவைகட்கு தபால் சார்ஜ் வேறு.

ஔஷதங்களைப் பற்றி விதவிதமான விநோத விளம்பரங்களாற் சலித்திருப்போர் முன், யானும் வெளிவருதல் வெட்கமே யாயினும், பிணியாளிகள் தங்கடங்கள் வியாதிகளை விவரமாயெழுதினால் மஹான்கள் சாஸ்திர முறையாய் ஒவ்வொரு மருந்துகளுஞ் செய்தனுப்புவேன். ஔஷதங்கட்கேற்றவாறு விலை விதிக்கப்படும். வியாதிகள், சிறந்த வைத்தியர்கள் கண்ணுங் கருத்துமாய் வைத்தியஞ் செய்துகொண்டு வருகையிலேயே மனமயக்காக்குஞ் சுபாவமுடைய தாதலால், யான் மேனாட்டு வைத்திய சிரேட்டர்களிடத்தும், கர்னாடக நவாபின் குடும்பத்தாரிடத்தும், மற்றுங் கனவான்களிடத்தும், ஏழைகளிடத்தும், யோக்யதாபத்திரங்கள் பெற்றிருப்போனெனப் பேச வாயெழவில்லை. விருப்பமுடையோர் ஒரே ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.

சுபம்! சுபம்!!

இங்ஙனம்.

கே. மு. ஷ. ஷண்முகசுந்தர நாயனர்,

நாயனர் அச்சுக்கூட சொந்தக்காரர்,

பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை.